உதகமண்டலம் மாவட்ட நீதிமன்றத்தில் 2026–ஆம் ஆண்டு **ஜூலை மாதத்தில் 28–ஆம் நாள்** வா.சா.3–ன் வாக்குமூலம் 1969–ஆம் ஆண்டு 44வது சட்டத்தின் ஏற்பாட்டின்படி ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது பிரமாணம் செய்விக்கப்படுகிறது.

| | | |
|---|---|---|
| O.S. No | : | 7 of 2020 |
| பெயர் | : | பாத்திமா |
| கணவர் பெயர் | : | ஹனிபா |
| வயது | : | 47 |
| தொழில் | : | வீட்டு குடித்தனம் |
| கிராமம் | : | குன்னூர் |
| தாலுக்கா | : | குன்னூர் |

---

**தேதி : 28.07.2026**.

வா.**சா.3 அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு, முதல் விசாரணை**:

நான் குன்னூரில் வசிக்கிறேன். நான் நீதிமன்ற அழைப்பாணையின் பேரில் நீதிமன்றத்தில் ஆஜராகியுள்ளேன். நான் 6ஆம் வகுப்புவரை படித்துள்ளேன். நான் தமிழ் மீடியத்தில் படித்தேன். தற்பொழுது என்னிடம் காண்பிக்கப்படும் பி.சா.ஆ–1 செட்டில்மெண்ட் ஆவணத்தில் முதலாவதாக உள்ள சாட்சி கையொப்பம் என்னுடையது. நான் மேற்படி ஆவணத்தில் பக்கம் 5 மற்றும் பக்கம் 6ல் என் கையொப்பங்கள் இட்டுள்ளேன் என்பது சரி. என் மாமனார் அவருடைய சொத்தை அவருடைய மகள் சபியாவிற்கு தானமாக கொடுத்ததற்காக அந்த பத்திரத்தில் நான் அவ்வாறு சாட்சி கையொப்பம் போட்டேன். இவ்வழக்கில் 3ஆம் பிரதிவாதி முகமது ஹனிபா என் கணவர் என்பது சரி. மேற்படி செட்டில்மெண்ட் ஆவணம் ஆங்கிலத்தில் உள்ள நிலையில் அதில் உள்ள வாசகங்கள் பற்றிய விவரங்கள் எதுவும்

தெரியாமலேயே நான் என் கையொப்பங்கள் இட்டுள்ளேன் என்றால் தவறு.

<u>**குறுக்கு விசாரணை**</u> :

பிரதிவாதிகள் தரப்பில் சாட்சியிடம் குறுக்கு விசாரணை இல்லை என்று தெரிவிக்கப்பட்டது.

A. Muraleedharan

Digitally signed by A. Muraleedharan
Date: 2026.07.28 17:14:27 +0530